# மெட்ரோ வாகன கட்டணம் புதிய திட்டம் தள்ளிவைப்பு

**சென்னை, ஆக. 1–**

மெட்ரோ ரயில் நிலையங்களில், பயண அட்டை வழியாக, வாகன கட்டணம் செலுத்தும் திட்டம், செப்., 1ம் தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. இந்த ரயில் பாதைகளில், 32 நிலையங்கள் உள்ளன.

இங்குள்ள வாகன நிறுத்தங்களில், வாகன நிறுத்த கட்டணத்தை, நேரடியாக, அங்கிருக்கும் ஊழியரிடம் செலுத்தும் முறை அமலில் உள்ளது.

இந்த நடைமுறையை மாற்றி, மெட்ரோ ரயிலில் பயணம் செய்ய, பயணியர் பயன்படுத்தும், 'டிராவல் கார்டு' என்கிற, பயண அட்டை வழியாக மட்டுமே, வாகன கட்டணம் செலுத்தும் வசதி, அனைத்து மெட்ரோ நிலையங்களிலும், இன்று முதல் அமல்படுத்த, மெட்ரோ நிர்வாகம் முடிவு செய்திருந்தது.

இந்நிலையில், இத்திட்டத்தை, மேலும் ஒரு மாதம் தள்ளி வைக்க, மெட்ரோ நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இது குறித்து, மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளதாவது:

மெட்ரோ நிலையங்களில், வாகன கட்டணத்தை தொகையாக செலுத்துவதில் இருந்து, பயண அட்டை வழியாக செலுத்தும் திட்டத்திற்கு மாற, கால அவகாசம் வேண்டும் என, பயணியர் கேட்டுக் கொண்டதால், இன்று அமல்படுத்த வேண்டிய இத்திட்டம், செப்., 1ம் தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, தெரிவிக்கப்பட்டுள்ளது.